RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22s138

OPEN ACCESS

# திருமுருக கிருபானந்த வாரியாரின் இறைப்பணிகள்

**போ. சித்ராதேவி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, தனபாக்கியம் கிருஷ்ணசாமி முதலியார் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), வேலூர்- 632001, தமிழ்நாடு, இந்தியா.

# Divine Works of Thirumuruga Kirubhanandha Vaariyaar

**B. Chitradevi** [a, *]

[a] Department of Tamil, Dhanabagyam krishnaswamy Mudaliar Collage for Women (Autonomous), Vellore-632001 Tamil Nadu, India.

* Corresponding Author: kaviphdtamizh@gmail.com

Received: 11-03-2021
Revised: 01-02-2022
Accepted: 03-02-2022
Published: 28-02-2022

Check for updates

**ABSTRACT**

Samiyanna, a Shiva devotee, lived in the steep Veera Saiva tradition in Kangeyanallur. His life partner is Tanjammal. Mallya was born as their fourth son. He was popularly known as Mallayadasar as he traveled from village to village. Mallyadasar - Kanakavalli Ammaiyar couple have eleven children. A baby boy was born on Friday, the ninth day of Document Monday. He is the warrior of Thirumuruga Kripananda. Born with a womb in the womb, the warrior was well-educated enough to pick up texts and read them when he was five years old. At the age of eight Venpaa became a singing power. He started composing songs like Virutham as he had the energy to sing hard venpa. By the age of ten he had memorized ten thousand songs. The best Murugan devotee. He lived a life of penance, performing daily spiritual discourses. He is a profound scholar in many fields such as religion, literature, oratory, writing and music. At the age of nineteen he married Amirthalakshmi, the daughter of his maternal uncle Sivaguru Mudaliar. He was very attached to Arunagirinath. The music with Iyal was taught to the warrior by his father. His father was the guru of Tamil grammar, Thevaram, Thiruvasakam, Tirupugal, historical hymns etc. Chief Minister Palanisamy has announced that his birthday will be celebrated as a state festival from 2021. The purpose of this article is to examine his religious work.

**Keywords:** Kirubhanandha vaariyaar, Shiva devotee, Thevaram, Thiruvasakam

## முன்னுரை

வாரியார் அவர்கள் இந்த சமுதாயம் தழைத்தோங்க, பல்வகையான பணிகளை மேற்கொண்டார்.அப்பணிகளில் அவர் சிறந்ததாகக் கருதியது ஆன்மீகப்பணியே ஆகும். அவர் எழுதியுள்ள ஆன்மீகக் கட்டுரைகளும், அவர் ஆற்றிய சமயச் சொற்பொழிவுகளும், அவர் செய்த திருக்கோயில் திருப்பணிகளுமே அவருடைய ஆன்மீகப் பணியைப் பறைசாற்றுகின்றன (Jagandha Iyer, 2007). சமயத்திற்கு அவர் ஆற்றிய சொற்பொழிவுகளையும் பணிகளையும் பற்றி ஆராய்வதே இவ்வாய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சைவ சமயம்

செய்வினை, செய்வான், வினைப்பயன், அப்பயனைச் சேர்ப்பவன் இந்த நான்கையும் தெளிவாகக்

கூறுவது சைவ நூல் ஒன்றே ஆகும். இதனை,

“செய்வினையும் செய்வானும்
அதன் பயனும் சேர்ப்பானும்
பெய் வகையால் நான்காகும்
விதித்த பொருள் எனக் கொண்டே
இவ்வியல்பு சைவ நெறி
அல்லவற்றுக் கில்லையென
உய்வகையால் பொருள் சிவன்என்
றருளாலே உணர்ந்தறிந்தார்”

என்ற பாடலால் அறியலாம் (Manikkanar, 2002). இத்தகைய விரிவான கருத்தையே வள்ளுவர்,

“வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது”

என்ற குறள் மூலம் அறியலாம் (Kirubaanandha vaariyaar, 2020; Varadharasan, 2004).

## ஆன்மீகம்

ஆன்மீகம் என்ற சொல் உண்மைப்பொருளைத் தேடுவது ஆகும்.உண்மையான பொருளை அடைவதற்கு அறிவு அடிப்படையாக அமைகின்றது. மெய்ப்பொருள் காண்பது அறிவு ஆகும். மெய்ப்பொருளாக விளங்குவது இறைவன். இதனை,

“எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு”

என்ற குறள் மூலம் அறியலாம்.

இறைவன் அறத்தைத் தாங்கி நிற்கின்றான் (Kirubaanandha vaariyaar, 2020). அந்த அறத்தை வலியுறுத்துவதே ஆன்மீகமாகும். அகத்துக்கும் புறத்துக்கும் அரணாக அமைந்து, ஒழுக்கநெறிக்கும் ஊன்றுகோலாவது திருக்கோயில்களே ஆகும்.அதனால் தான் ‘கோயில்கள் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்’ என்று உலகநீதி உரைக்கின்றது. இறைவனை அடைந்து முக்திப்பெற வேண்டுமென்றால், மனிதன் அருவமாக மாறி இறைவனைக் காணவேண்டும். இல்லையேல் இறைவன் உருவமாகத் தோன்றவேண்டும் என்று கூறுகிறார்.

## ஆலயம் ஏன்

அங்கிங்கொளாதபடி எங்கும் பிரகாசமாய், ஆனந்த மூர்த்தியாகி அருளொடு நிறைந்தவன் இறைவன். அவன் எல்லா இடங்களிலும் இருக்கின்றான். அந்த இறைவனை ஆலயத்திற்குச் சென்றுதான் வழிபட வேண்டுமென வேத நூல்கள் காட்டுகின்றன. பசுவின் உடம்பு முழுக்க பால் பரவி இருந்தாலும், மடியின் மூலமாகத் தான் பாலை பெறமுடியும். பூமியின் அடியில் எங்கும் வியாபித்திருக்கும் தண்ணீரை நமக்கு வேண்டுமாயின் ஒரு இடத்தில் கிணறு வெட்டித்தான் பெறமுடியும். அதுபோல் எங்கும் இறைவன் நிறைந்திருந்தாலும் கோவிலில் மட்டுமே காணமுடியும் .எனவே நம்முடைய வினைகள் வெந்து மறுபிறப்பு உண்டாகாமல் இருப்பதற்கு ஆலய வழிபாடு இன்றியமையாததாகும். பாமரர் மட்டுமல்ல, இறைவனது அருளைப் பெற ஞானிகளும் ஆலயம் சென்று வழிபட்டிருக்கின்றனர். நாயன்மார்களும் ஆழ்வார்களும் நமக்கு வழிகாட்டியாக வாழ்ந்து சென்றுள்ளனர்.

## ஆன்மிக நெறி

ஆலயத்திற்குச் சென்று வழிபட சில விதிமுறைகள் உண்டு.சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நால்வகை ஆன்மீக நெறிகள் உண்டு. இதனையறிந்துச் சென்று இறைவனை அடைவதே ஆன்மீக நெறியாகும்.

அகம், புறம் இரண்டும் தூய்மையாக இருக்கவேண்டும். புறந்தூய்மை நீராலமையும், அகந்தூய்மை வாய்மையால் அமையும் என்றார் வள்ளுவர் (Varadharasan, 2004). எனவே தூய்மையோடு இறைவனை வழிபடுதல் வேண்டும். அதற்கு இறைபக்தி முக்கியம். இதனை மனதில் வைத்து, மக்களை நல்வழிப்படுத்த ஆலயத்தைக் கட்டி, அதற்குரிய தத்துவங்களைச் சொல்லி வழிகாட்டிச் சென்றுள்ளனர் சான்றோர்கள்.

## வாரியாரின் ஆன்மீகப்பணி

மானிடராய் பிறந்த நாம் மனம், மொழி, மெய் ஆகிய மூன்றாலும் அறம்புரிய வேண்டும்.மனத்தால் செய்யும் அறம், கடவுள் உணர்வும் நற்சிந்தனையும் ஆகும்.மொழியால் புரியும் அறம் ஆண்டவன் திருநாமம் ஓதியே புகழ்பாடுதலும், பிறருக்குத் துன்பம் பயிலாத மொழிகளைக் கூறுவதுமாகும். உடலால் புரியும் அறம் பதியை மலர்கொண்டு பரவுதல், அடியார்களுக்குத் தொண்டு புரிதல், பிறர் உயிர்க்கு நன்மை செய்தலும் ஆகும். 'அறத்தினூஉங்கு ஆக்கம் இல்லை' என்பார் திருவள்ளுவர். அறமே அனைத்திற்கும் ஆணிவேராகத் திகழ்வது. அத்தகைய அறநெறியில் மக்களைச் செலுத்துவதையே தமது அன்றாடக் கடமை எனக் கொண்டு வாழ்ந்தவர் வாரியார்.

"ஆன்மாக்களாகிய நமக்கு என்றும், எங்கும் பாதுகாப்பாக விளங்குவது அறமே ஆகும். அதனால், ஔவைப் பிராட்டியார் 'அறஞ்செய் விரும்பு' என்று கூறினார். 'திறம்பு காலத்து யாவையும் சிதையினும் சிதையா அறம்' என்றார் கம்பர். எனவே அறத்தின் வடிவாக இருந்து இறைவன் உலகைத் தாங்குகிறான்.இறைவனை அறம் தாங்குகின்றது." (Kirubaanandha vaariyaar, 2020) அந்த அறத்தின் வடிவாக உள்ள இறைவனுக்கு, முடியுடை மூவேந்தர்களுக்குப் பிறகு, தமிழகத்தின் தனிப்பெரும் செல்வங்களை திருக்கோயில்களைப் பெருமளவு செப்பம் செய்த பெருமை நமது வாரியார் ஒருவரையே சாரும். இவர் பலகோடி ரூபாய்கள் செலவில் பல திருக்கோயில்களைச் சீர்செய்து இருக்கின்றார்.திருக்கோயில்கள் வளர்ச்சிக்காக வாழ்நாள் முழுவதும் சமயச் சொற்பொழிவு ஆற்றியுள்ளார்.

## வாரியாரின் சமயச் சொற்பொழிவுகள்

மனம், வாக்கு, காயம் ஆகிய திருகரணங்களாலும் நாம் கருத்தைச் செய்கின்றோம்.வாரியார் தம் வாழ்நாள் முழுவதும் வாக்கினால், இறைச் சிந்தனையைச் சமயச் சொற்பொழிவுகளாக மக்களுக்கு அறத்தையே போதித்து வாழ்ந்து வந்தார். உடலால் ஓயாமல் உழைத்து, தமிழகம் மட்டுமின்றி, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இலண்டன், அமெரிக்கா போன்ற அயல்நாடுகளுக்கும் சென்று சமயச் சொற்பொழிவுகள் ஆற்றி, இறைவன் கருணையையும் இறைவனுடைய மகிமையையும் எடுத்துக்கூறி வந்தார். அதன்மூலம் மக்களை சமுதாயத்தில் அன்பும் அறமும் தழைத்தோங்கச் செய்தார்.

## வாரியார் சொற்பொழிவின் நோக்கம்

ஆன்மீகம் தழைக்க வேண்டும். ஒற்றுமை நிலவவேண்டும். சாதி, இனம், மொழி, மதவெறிகள் கூடாது. இவைபோன்ற வெறிகளால் சகோதரத்துவத்தை இழந்து விடக்கூடாது. தெய்வீகச் சிந்தனை, தேசிய உணர்வு மேலோங்க எல்லோரும் முயற்சி செய்யவேண்டும். சொற்பொழிவுகளின் நோக்கம் ஆன்மீகத்தைப் பரப்புவது, சமுதாயத்தில் நல்ல சிந்தனைகளை வளர்ப்பது, மக்களிடையே ஒற்றுமை உணர்வை ஏற்படுத்துவது என்று கூறுகின்றார் வாரியார்.

"வாரியார் மக்கள் விருப்பத்திற்கு ஏற்ப, நீதிகளை எடுத்துரைக்கவும், மக்களுக்கு நன்கு தெரிந்த புராணங்களாகிய பெரியபுராணம், கந்தபுராணம், இராமாயணம், மகாபாராதம் போன்றசமய சார்புள்ள

நூல்கள் கூறும் அறத்தையும், சைவ நாயன்மார்கள் வாழ்க்கையையும் வைணவப் பெரியோர்களுடைய வாழ்க்கையையும் எடுத்துகாட்டி மக்களை அறியாமையிலிருந்து விடுபடச் செய்தும் இறை சிந்தனையை உருவாக்கியும் தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார். காமதேனுவின் பாலைக் களர் நிலத்தில் கவிழ்ந்ததுபோல், அரிய மானுடப் பிறப்பைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது.எனவே இப்பிறப்பில் எப்பாடுபட்டாவது இனிப் பிறவாத பேற்றினைப் பெற்றிட வேண்டும் என்பது வாரியார் கோட்பாடு.வாரியார் 65 ஆண்டுகளாகச் சொற்பொழிவு செய்தவர். ஒன்பதாவது வயதில் மேடை ஏறிப்பேசியவர்.19 வயதிலிருந்து பல ஊர்களுக்கும் சென்று சொற்பொழிவு செய்தவர். ஆண்டுக்கு சுமார் 600 நிகழ்ச்சிகள் என்று 30,000 நிகழ்ச்சிகளுக்குமேல் செய்துள்ளார். வாரியார் சாலப் பரிந்து ஊட்டும் தாயைப்போல, ஆன்மாக்களுக்கு இறைபக்தியை வளர்த்து அதற்கு இருப்பிடமாக உள்ள இறைவனுக்குக் கோயில் திருப்பணிகளைச் செய்தார்" (Kumari Anand, 1995).

## வாரியாரின் திருக்கோயில் பணிகள்

ஆன்மீகச் சொற்பொழிவுகள் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு வாரியார் கோயில் திருப்பணிகள் செய்துள்ளார்.அவருடைய திருக்கோயில் பணிகள் பல திறத்தன. "தந்திக் கம்பியில் மின்சாரம் இருந்தாலும், பல்பு மூலமாகத்தான் வெளிச்சம் பெறமுடியும். அதுபோல கடவுள் எங்கும் நிறைந்திருந்தாலும், ஆலயத்தில் சிறந்து விளங்கும் திருவுருவத்தின் மூலமே அருள்பெற முடியும்" (Kirubaanandha vaariyaar, 2020) என்கிறார்.

சூரிய வெளிச்சம் எங்கு நிறைந்திருந்தாலும், பூதக்கண்ணாடி வழியாக வரும் வெளிச்சத்துக்கு விசேஷ சக்தி உண்டு.அதில் நெருப்பு உண்டாகும். அதுபோல, கடவுள் எங்கும் நிறைந்திருந்தாலும், ஆலயத்தில் அவர் அருள் விசேஷமாகப் பிரகாசிக்கிறது.பாட சாலையில் மாணவர்களுக்கு உண்மையான நாணயத்தைத் தெரிவிக்கப் புத்தக்கத்தில் உள்ள படம் மூலமாகக் காட்டுகிறார்கள். அதுபோல, கடவுளைப் பற்றி மனிதன் புரிந்துகொள்ள ஆலயத்தைக் கட்டினார்கள் பெரியோர்கள்.இதை நன்குணர்ந்த வாரியார் தமக்கென வாழாமல், உலக மக்களுக்காக வாழ்நாள் முழுவதும் சமயச் சொற்பொழிவாற்றி, அதன்மூலம் பல திருக்கோயில்களின் திருப்பணிகளைச் செய்து வந்தார்.

## வள்ளிமலை திருப்பணி மகா கும்பாபிசேகம்

வள்ளிமலை என்னும் திருத்தலம் உலக மாதாவாகிய வள்ளியம்மையார் அவதரித்த புண்ணியத்தலம். முருகப்பெருமான் வள்ளியை திருமணம் செய்த இடமாகும்.அவை முத்திவீடு, தேவர்கள், தலைவேதம், வள்ளிமலை, நாம் முக்தி வீட்டையும் தேவர்களையும் வேதத்தையும் காணமுடியாது. இதனை அருணகிரியார், ஆறுமுகக் கடவுளுக்கு வள்ளியாரைத் திருமணம் செய்வித்த பெருமானே! தீவினைகளை விரைவில் நீக்கும் பெருமானே! ஊமத்தம் மலரையும் பிறைச் சந்திரனையும் சூடியுள்ள சிவபெருமானது திருக்குமாரரும், மல்யுத்தம் புரிகின்ற திரண்ட அழகிய வயிற்றை உடையவனே! உத்தம குணங்களின் வடிவமாகிய உமாதேவியரது புத்திரராகத் தோன்றிய மகா கணபதியைத் தேன் துளிக்கின்ற புதுமலர்களால் அர்ச்சித்து வணங்குவேன் என்று கூறுகிறார்.

## காங்கேய நல்லூர் இராஜகோபுர திருப்பணி

வாரியாரின் தந்தை மல்லையப்ப தாஸர் ஆவார். இவர் முருகப் பெருமானையும் திருப்புகழ் பெருமையையும் உலகிற்கு அளித்த அருணகிரிநாதருக்கு அமைத்த கோயிலில் இராஜகோபுர திருப்பணி நிறைவேறாமல் இருக்கிறதே என்று எண்ணி மனம் கலங்கினார். தன் அருமை மைந்தன் வாரியாரை அழைத்துக் கொண்டு, மதுரை சென்று திருப்புகழ் சாமியை வணங்கி, இராஜகோபுரத் திருப்பணியின் நிலையை விளக்கி, திருப்பணி தொடர முடியாதையும் சொல்லி, செட்டிநாட்டில் சென்று விரிவுரை செய்யக் கருதுவதாகவும், குருநாதரை ஆற்றுப்படுத்துமாறும் வேண்டி நின்றார்கள். திருப்புகழ் சாமி சீடர்களை நோக்கி, 'கவலை அடையாதே!ஒரு ரூபாய் மட்டும் மூலதனமாக வைத்துக்கொண்டு திருப்பணியைத் தொடங்கு.உன் ஊருக்கு அருகிலிருந்தே உரிய பணம் வந்து சேரும்' என்று கூறி, ஒரு திருநீற்றுப்பையை அளித்தார்கள்.அவ்வாறே நடந்தது.மூன்று திங்களில் இராஜகோபுரத் திருப்பணிகள்

நிறைவெய்தன.காங்கேய நல்லூரில் முருகப் பெருமானின் திருக்கோயிலில் அருணகிரிப் பெருமானின் அழகிய புதுமையான சிலையும் வைக்கப்பெற்றது.

## வாரியார் செய்த திருப்பணிகள்

காங்கேய நல்லூர் முருகன் கோயில் திருப்பணிகள். சென்னை குயப்பேட்டை இராஜகோபுரத் திருப்பணி மேற்படி திருக்குளத் திருப்பணி. மோகனூர் அருணகிரிநாதர் அறச்சாலை திருப்பணி. காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருமதில் திருப்பணி. வடலூர் சத்திய ஞானசபைத் திருப்பணி. திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் திருப்பணி. சமயபுரம் திருப்பணி கோவை தடாகம் ரோடு பாலதண்டாயுதபாணி கோயில் திருப்பணி. கோவை வெங்கேசுவரர் கோயில் திருப்பணி. கோவை வெங்கடேசுவரர் கோயில் திருப்பணி. கோவை ஐயப்பசுவாமி திருப்பணி. கோவை காமகோடி வித்யாமந்திர் திருப்பணி. நெல்லிக்குப்பம் வீரபத்திர சுப்ரமணிய சுவாமி கோயில் திருப்பணி. வயலூர் திருப்பணி (இரண்டு முறை). காங்கேநல்லூர் பெருமாள் கோயில் இராஜகோபுரத் திருப்பணி. சென்னை சைதை குளத்திருப்பணி ஆகும் (Kirubaanandha vaariyaar, 2020)

## முடிவுரை

வாரியார், வாழ்நாள் முழுவதும் கோயில் பூசை, சொற்பொழிவுகள் என ஆன்மிக வழியில் சரியாகச் சென்று கொண்டிருப்பவர். ஒருநாள் கூட முருகனுக்கு பூசை செய்யாமல் இருந்ததில்லை. இவரின் மூச்சுக்காற்று கூட முருகா! முருகா! என்றுதான் இருக்கும். வயலூர் முருகன்மீது அவருக்குத் தனி ஈடுபாடு. வயலூர் எம்பெருமான் என்று கூறித்தான் அவர் தன் சொற்பொழிவைத் துவங்குவார். அந்த அளவுக்கு பக்தி கொண்டவர். ஏராளமான கோயில்களுக்குத் திருப்பணி செய்து கொடுத்த பெருமையும் இவருக்கு உண்டு. இவர் திருப்பணி செய்ய உதவி செய்த கோயில்களின் எண்ணிக்கையோ எண்ணிலடங்காதவையாகும். வாரியார் அவர்கள் நாயன்மார்களைப்போல் இறைவனிடம் எதையும் வேண்டாத பெரியாராகவே தான் வாழ்ந்தார். மனித வாழ்க்கையில் பிற்காலத்திலும் நினைத்துப் போற்றக்கூடியவர்களாக வாழ்பவர்கள் சிலரே. அந்த வரிசையில் திருமுருக கிருபானந்த வாரியாரும் ஒருவர் என்பதை நாமும் நினைவில்கொள்வோம்.

## References

Jagandha Iyer, (2007) Kirubaanandhavaariyaarin valkai varalaru, Aanmeega matha ithal, Tirupukalamirtham, Chennai, India.

Kirubaanandha vaariyaar, (2020) Kirubaanandha vaariyaarin valkai varalatru surukkam, Kugasri variyaar pathippagam, Chennai, India.

Kirubaanandha vaariyaar, (2020) Thirukkural kadhaikal, Kugasri variyaar pathippagam, Chennai, India. Kumari Anand, (1995) Variyarai kanda kangal, Vanathi pathippagam, Chennai, India.

Rasagopal, (1996) Variyaar padaippukal-oor ayeivu, Doctoral thesis, Chennai, India.

Varadharasan, Mu., (2004) Thirukkural Thelivurai, The South India Saiva Siddhantha Works Publishing Society, Tinnevelly, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License